
ராமதாஸ் நகர் மக்கள்


செல்வகணபதி ஆலோசனை

# ‘எங்க சாமியும் உங்க தெய்வமும் ஒண்ணு’

## - பா.ம.க. வேட்பாளரிடம் பெண்கள் உருக்கம்!

கோடை வெப்பத்திற்கு சவால் விடும் அளவுக்கு பென்னாகரம் இடைத்தேர்தலில் அனல் பறக்கிறது. வன்னியர் பெல்ட் என்பதால் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த வேட்பாளர்களையே களம் இறக்கியுள்ளன. ஆளுங்கட்சி தி.மு.க. சார்பில், காலமான பெரியண்ணனின் வாரிசு இன்பசேகரனும், அ.தி.மு.க. சார்பில் தர்மபுரி மாவட்டச் செயலாளர் அன்பழகனும், பா.ம.க. சார்பில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் கோ.க.மணியின் மகன் தமிழ்க்குமரனும், தே.மு.தி.க. சார்பில் காவேரி வர்மனும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பென்னாகரத்தைப் பொறுத்தவரை மலை, மலை குக்கிராமங்கள், குன்று, பொட்டல்காடு என விரிந்து காணப்படுகிறது. இங்குள்ள சின்னச் சின்ன மலை கிராமங்களில் 100லிருந்து 150 பேர் வரை குடியிருந்து வருகின்றனர். அவர்களை குடிசைகளில் சந்தித்து வாக்கு சேகரிப்பதற்குள் அரசியல் கட்சிப் பிரமுகர்களுக்கு வாயில் நுரை தள்ளிவிடும் அளவுக்கு ஒவ்வொரு கிராமத்துக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளது.

காவிரி ஆறு பாய்ந்தாலும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுகிறது. விவசாயம் பொய்த்து நிலங்கள் பொட்டல்காடுகள் ஆனதால், இங்குள்ள மக்கள் பெரும்பாலானோர் பிழைப்பு தேடி திருப்பூர், ஈரோடு, பெங்களூரு எனப் பறந்து விட்டனர். தற்போது அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கும் ஒரே ஆறுதல் இடைத்தேர் தலையொட்டி போடப்பட்டிருக்கும் சாலை மட்டும்தான். முகம் பார்க்கும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் ரோடுகள் ஜொலிக்கின்றன.

இந்த நிலையில் பென்னாகரம் தொகுதியில் நாம் விசிட் அடித்தோம்.

பா.ம.க. வேட்பாளர் தமிழ்க்குமரன் ராஜாவூர் பகுதியில் வாக்கு சேகரிப்பதாக நமக்குத் தகவல் கிடைக்க, நாம் அங்கே விரைந்தோம். ராஜாவூர் பகுதியில் முன்பே டெண்டர் விடப்பட்ட சாலைப் பணிகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன. சாலை பணி செய்யும் ஆண், பெண் தொழிலாளர்களிடம் தமிழ்க்குமரன் வாக்கு கேட்டுக் கொண்டிருந்தார். அவருடன் எடப்பாடி எம்.எல்.ஏ. காவேரி உட்பட சிலர் நோட்டீஸ் வழங்கி ‘தாயில்லா பிள்ளை தமிழ்க்குமரனுக்கு வாக்களியுங்கள்’ என சென்டிமென்டாக வாக்கு சேகரித்து கொண்டிருந்தனர். அப்போது ஒரு பெண், பா.ம.க. வேட்பாளரிடம் “எங்க குல தெய்வமும், நீங்க கும்பிடுற சாமியும் ஒண்ணுதான். அம்மா உயிரோடு இருக்குறப்ப நாம எல்லோரும் கிடா வெட்டி பூஜையெல்லாம் செய்வோம். அப்ப நீங்க சின்ன பையனா இருப்பீங்க. அதனால் எங்க ஓட்டை எல்லாம் உங்களுக்குத்தான் போடுவோம். கவலைப்படாமல் போங்க’ என்று கூறினாலும் அதே கூட்டத்தில் அதே சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணோ, “இந்த கத்திரி வெயிலில் மம்முட்டி எடுத்து ராத்திரி வரை வெட்டினால்தான் எங்களுக்குக் கூலி கிடைக்கும். இதுல யாரு வந்தா என்ன! போனா என்ன?” என்று ஆதங்கப்பட்டதையும் காணமுடிந்தது.

**ஏ.எம்.எஸ்.**

அடுத்து நாம் பென்னாகரம் வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்திற்கு நடையைக் கட்டினோம். அங்கே தே.மு.தி.க. வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மாநில துணைச் செயலாளர் இளங்கோவன் தலைமையில் நடந்து கொண்டிருந்தது.

மைக் பிடித்தவர்களெல்லாம் ‘கேப்டன் இந்த சமுதாயத்தைக் காக்க வந்த ரட்சகர்’ என்கிற அளவில் பேசி அமர, கிடைத்த சிறிய சந்தர்ப்பத்தில் நாம் தே.மு.தி.க. வேட்பாளர் காவேரி வர்மனிடம் பேசினோம்.

அவர், “இரண்டு கட்சிகளும் (தி.மு.க.-பா.ம.க) இந்தப் பகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்தும் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. அவை ஊழல் கட்சிகள் என மக்கள் தெளிவாக தெரிந்து கொண்டனர். ‘அவுங்க இங்கேயே தங்கி ரொம்ப நாட்களாக தேர்தல் பணி செய்கிறார்களே? நீங்க இப்பதானே வேட்பாளர் அறிமுகமே செய்கிறீர்கள்’ என்று என்னிடம் மக்கள் கேட்கின்றனர். அவர்களிடம் நான், ‘100 நாள் பொய் சொன்னாலும், ஒரு நாள் உண்மையைச் சொன்னால் போதும். நீங்கள் புரிந்து கொண்டு எனக்கு வாக்களிப்பீர்கள்’ என்று கூறி வருகிறேன். நிச்சயம் நான் வெற்றி